சிந்தனை
தொகுதி VII இதழ் I, II & III - 1995

# தென்னாட்டு வைணவ பக்திநெறியில் இராமானுஜர்

விக்னேஸ்வரி சிவசம்பு

இந்து மதத்தின் அறுவகைச் சமயநெறிகளுள் விஷ்ணுவை முழுமுதற் கடவுளாகக் கொண்டு விளங்கும் வைணவ சமயமும் ஒன்றாகும். இன்றும் இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் வைணவ சமயத்தினைப் போற்றிப் பின்பற்று பவர்கள் இருந்து வருகின்றனர். இந்தியாவில் மட்டுமல்லாது இலங்கை மற்றும் தென்கிழக்காசிய நாடுகள் பலவற்றிலும் விஷ்ணுவை வழிபடும் மரபு இருந்து வருகின்றமை கண்கூடு.

## 1.0 பக்தி என்பதன் விளக்கம்

தென்னாட்டு பக்திநெறிக்கு இராமாஜரது பங்களிப்புப் பற்றி ஆராய்வதற்கு முன் பக்தி பற்றிய கருத்தினை நோக்குவது இன்றியமையாததாகும். பக்தி என்பது "பஜ்" என்ற வேர்ச் சொல்லிலிருந்து பிறந்ததாகும். சாதாரண பாவனையில் இச்சொல்லானது பல்வேறு தொடர்புகளின் அடிப்படையில் வைத்துப் புரிந்து கொள்ளப்படுவ தால் அதன் குறியியல் அர்த்தமும் இடத்திற்கிடம் வேறுபடுகிறது.

இப்பக்தி பற்றிய கருத்தினை நாரத பக்தி சூத்திரம் விரிவாகக் கூறுகின்றது. நாரத பக்தி சூத்திரத்தின்படி பக்தியானது குணங்குறியற்றது. அது பிரதிபலனை எதிர்பார்ப்பதில்லை; கணந்தோறும் மேலும் மேலும் பெரிதாக வளர்வது; அதில் இடையீடு இல்லை; அது நுண்ணியதிலும் நுண்ணியது; அது அனுபவத்திற்கு உரியது; பக்தியைப் பெறுகிறவன் பக்தியையே காண்கிறான்; அதையே கேட்கிறான்; அதையே பேசுகிறான். அதையே சிந்திக்கிறான்; பக்தர்கள் முற்றிலும் பகவான் மயமானவர்கள்; பக்தர்களுக்கிடையில் ஜாதி, கல்வி, உடல் அமைப்பு, குலம், செல்வம், தொழில் முதலியவைகளை முன்னிட்டுப் பேதமில்லை என விளக்கம் தரப்படுகிறது.

உலகப் பற்று வேறு, பக்தி வேறு. உலகப் பற்றின் கண் இல்லாத மூன்று மேன்மைகள் பக்தியின் கண் உள்ளன. முதலாவதாக உலகப்பற்று வியாபாரம் செய்யும் தன்மையானது. தெய்வப் பற்றோ எனில் தியாகம் செய்யும் தன்மையது. தான் காட்டுகிற அன்புக்குக்

கைமாறாகப் பிரதியன்பையோ சுகத்தை யோ செல்வத்தையோ எதிர்பார்ப்பது உலகப்பற்று. அந்தளவில் அது வர்த்தகம். பின்பு பக்தியோ தன்னிடத்து இருப்பதை எல்லாம் கொடுக்கிறது. தனக்கு ஏதேனும் பிரதியுபகாரம் வேண்டுமென்று கேட்பதுமில்லை. ஏற்பதுமில்லை. கரவாது கொடுப்பது பக்தியின் முதன் மகிமை யாகும். உலகப்பற்று பயம் நிறைந்தது. அபயம் அல்லது எதற்கும் அஞ்சாமையே பக்தியின் பாங்கு. இது இரண்டாவது மகிமை. உலகப் பற்றில் போட்டிக்கும் பொறாமைக்கும் இடமுண்டு. தனக்கென்றே தேடும் தன்மையது அது. காதலர் இருவர் கிடையில் உள்ள அன்பு அதற்கு எடுத்துக் காட்டு ஆகும். பிறர் அதில் பங்கு கொள்ள வரலாகாது. பின்பு பக்தியோ அனைவ ரையும் அழைத்து அதில் சேர்த்துக் கொள்கிறது. இது பக்தியின் மூன்றாவது மகிமையாகும். இவ்வாறாக நாரதரது பக்தி பற்றிய கருத்து அமைகிறது.

## 2.0 தென்னாட்டு வைணவ பக்தி இயக்கம்

வைணவநெறிக்கு அடிப்படை பக்தியாகும். அப்பக்தியின் தொடக்கத்தை வேதத்தில் காணலாம். வேத இலக்கிய த்திலே தெய்வங்கள் மீது கொண்ட பக்தியானது கீதையிலே முழு ஒப்படைப் பாக வளர்ச்சி எய்தியமை குறிப்பிடத் தக்கது. தனிமனிதனைக் கடவுளுடன் இணைக்கும் இந்த பக்தி உணர்வானது ஒரு மக்களியக்கமாக பரிணாமம் பெற்ற நிலையே தென்னாட்டுப் பக்தி இயக்க மாகும். இவ்வாறான இயக்கம் தமிழ் நாட்டிலே கி.பி. 6ம் நூற்றாண்டை அடுத்துத் தோற்றம் பெற்றதெனக் கொள்ளலாம். சைவம், வைணவம் ஆகிய சமயங்கள் இதற்கு மூலநிதிகளாக அமைந்தன. தமிழகத்தின் பல்வேறு கிராமப்புறங்கள் தோறும் முன்னெடுக்கப் பட்ட இப்பேரியக்கம் அவ்வவ் பிரதேச மக்களது பாரம்பரிய நம்பிக்கைகள் வாழ்க்கை முறை, கலைஞர்களுக்கள் முதலியவற்றில் புராண இதிகாச மரபு சார்ந்த எண்ணக் கருக்களை விதைத்தது. அவற்றின் மூலம் வாழ்க்கையின் நோக்கும் போக்கும் தொடர்பாகப் புதிய விளக்கங் களை முன்வைத்தது. இவற்றின் மூலம் உலகியல் ஈடுபாடுகளை மட்டுமே முதன்மைப் படுத்தி நின்ற தமிழர் சமூகமானது சமயச்சார்பு கொள்வதற்கான வரலாற் றுத் திருப்பம் நிகழலாயிற்று.[1]

வைணவபக்தி நெறியானது நான், எனது என்னும் அகப்புறப் பற்றுக்களை ஒழித்துத் தனது வலுவில்லா நிலையினை உணர்ந்து இறைவனின் பாதார விந்தங் களைச் சரணாகதி அடையும் தன்னிழப்பு நிலையையே அடிப்படையாகக் கொண்டது. அதுவே பக்திக்கு வித்தாகும். அதுவே முக்திக்கு வழியுமாகும். தன்னை மறந்து தலைவன் தாள் பற்றி அவனிலேயே பித்துக் கொள்ளும் இன்ப அன்பினை வைணவர் பிரபக்தி என அழைப்பர். இவ்வாறு திருமாலின் மீது பிரபக்தி கொள்ளுவோரை சாமானிய மக்கள், ஆசாரியர்கள், ஆழ்வார்கள் என மூவகை யாகப் பிரிக்கலாம். இம்மூவகையோரதும் பொதுத்தன்மை யாதெனில் நான் செய்கிறேன் என்ற தன்னுணர்வின்றி எப்பொழுதும் நான் என்பதை ஒழிக்க முயலும் முயற்சியே ஆகும். இவ்வாறு முயல்கையில் இத்தகையோருக்காக எளியனாகிக் கீழிறங்கி வந்து தன் முயற்சியால் பகவான் இவர்களைத் தன் அடிகளிலே சேர்த்துக் கொள்கிறான்.

அஃதாவது முக்திக்குரிய சாதனம் இறைவனேயாக வேறு சாதனம் வேண்டாத நிலையே பிரபக்தி ஆகும்.[2] பக்தியின் முதிர்ச்சியிலேயே பிரபக்தி உண்டாகும் என்பது வைணவத்தின் முடிவு. பகவானை ஆண்டானாகவும், தன்னை அடியவனாகவும் பாவனை பண்ணும் தாஸ்ய பாவம், அவனைத் தந்தை அல்லது மகனாகப் பாவிக்கும் வாத்சல்யபாவம், நண்பனாகக் கொள்ளும் ஸக்யபாவம், அவனைத் தலைவனாகவும் தன்னைத் தலைவியாகவும் கற்பிக்கும் மதுரபாவம் என்னும் பாவனைகளும் பக்தி முதிர்ச்சியின் வெளிப்பாடுகளே ஆகும்.

இறை உணர்வும் அவனை ஏத்தும் மரபும் காலத்தால் மிகமிக முற்பட்டனவாகும். இறை உணர்வும் பக்தி இயக்கமும் மிக மிகப் பழங்காலத்திலேயே மனிதன் தன் உணர்வு பெற்ற அந்தநாளிலேயே அரும்பிவிட்டது எனலாம். பக்தி என்பது தம்மினும் மிக்காரிடம் காட்டும் ஓர் உணர்வு, பாசம் அல்லது பற்று. உலகம் இறைவன் முன் விண்ணப்பம் வைத்து வேண்டுதலையே பக்தி என்கிறது. வாழ்கின்ற சமயங்களெல்லாம் இப்பக்தி அடிப்படையில் தான் வாழ்கின்றன. வாழ்வில் முன்னேற மறுமை நலம் பெற முழு நம்பிக்கை பற்று ஆகியவை கலந்த பக்தியே அடிப்படையாக உள்ளது. பக்தியும் அதன் அடிப்படையில் முகிழ்ந்த சமயமும் எண்ணத்தில் உறுதியான உள்ளத்தில் உணர்வில், சொல்லில் செயலில் அமைந்த மனிதனுடைய தெய்வநெறி, உலகநெறி, உற்ற சமுதாய நெறி ஆகியவற்றில் அடங்குவனவாகும். இப்பக்தியும் சமய நெறியும் குறுநிலம் அல்லது திணை அடிப்படையில் அரும்பி நாட்டு நலமாக மலர்ந்து உலக உணர்வாகக் காய்த்துக் கனிகின்ற ஒன்றாகும்.[3]

இன்று காணப்படும் வகைகளுக்கு முற்றும் மாறுபட்டதாய் முரணியதாய்க் கூட அந்தத் தொடக்க நாளில் பக்தி மனித உள்ளத்தில் தோன்றியிருக்கும். ஆறறிவுடைய மனிதன் தோன்றிய அந்தநாளிலே மனம்போன போக்கிலே வாழ்ந்தவன். வரையறுத்த சமுதாய வாழ்வு அவன் அறியாதது. அவன் மனம்போன போக்கில் செல்லும்போது பல அல்லல்களைச் சந்திந்திருத்தல் கூடும். தான் கருதியது முடியாதபோது அவன் சிந்தனை எண்ணம் புதிதாக அரும்பிய உணர்வு ஆகியவை அவனுக்கு ஓர் உண்மையினை உணர்த்தியிருக்கும். அந்த உணர்வே பக்தி இயக்கத்தின் வித்தாக அமைந்தது.4

தென்னக வரலாற்றில் கி.பி. 6ம் நூற்றாண்டில் உருவான பக்தி இயக்கம் ஏறத்தாழ 300 ஆண்டுகள் தொடர்ந்து செயற்பட்டதன் விளைவாக தென்னாட்டின் சமூக வாழ்க்கையில் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தியது. சமயம் வாழ்க்கையின் உட் பொருளாயிற்று. சமய உண்மைகள் தொடர்பான பன்முகச் சிந்தனைகள் உருவாகி வளர்ந்தன. அவற்றால் தத்தவ நோக்குகள் விரிவடைந்தன.[5] இந்து மதத்தின் இருபெரும் கிளைகளான சைவமும் வைணவமும் தமது பொது எதிரிகளை முறியடிப்பதற்காக ஒருங்கிணைந்து நடாத்திய இயக்கத்தில் சமத்துவம், உருவவழிபாடு இயற்கையில் இறைவனைக் காணும் தன்மை, வேதக் கருத்துக்களைத் தமிழில் தரும் இயல்பு, உறவுமுறைகளைப் போற்றும் மரபு என்பன பொதுப்பண்பாயின. மக்களை மகிழ்விக்கும் கலைகள் தெய்வீகத்தில் பிணைக்கப்பட்டன. இப்பக்தி இயக்கத்திலே முன்னின்று உழைத்த நாயன்மார்களும் ஆழ்வார்களும் கிராமம் கிராமமாகச்

சென்று தமது பக்தி அனுபவங்களை இனிய பாசுரங்களாற் புலப்படுத்தினர்.

இவ்வாறாக தென்னாட்டு பக்தி இயக்க வரலாற்றிலே வைணவபக்தி நெறியினை மிகவும் உன்னதமாக வளர்ச்சியடையச் செய்த ஆழ்வார்களது பணியினைத் தொடர்ந்து இராமானுஜரது பங்களிப்பும் குறிப்பிடத் தக்கதொன்றாகும். இவ்வகையிலே ஆழ்வார்களுக்குப் பின்னர் தோன்றியவர்களில் இராமானுஜர் குறிப்பிடத் தக்க வராவர். இவர் இளையாழ்வார், எம்பெருமானார், உடையவர், கோயில் அண்ணன், சடகோபன், பொன்னடி, தேசிகேந்திரர், ஸ்ரீபாஷ்யக்காரர், பூதபுரீசர், திருப்பாவைஜீயர், பதிராஜர், லஷ்மனமுனி என்றெல்லாம் வழங்கப் படுபவர். இவர் தொண்டை நாடு காஞ்சியை அடுத்த ஸ்ரீபெரும்புதூர் எனும் ஊரிலே பிறந்தவர். இவர் கி.பி. 1017ம் ஆண்டிலே பிறந்து கி.பி. 1137 வரையான 120 வருடங்கள் வாழ்ந்தவர் என்று வைணவ பரம்பரை கூறுகிறது.[6]

### 3.0 சைவபக்திக்கு இணையாக வைணவ பக்தியை இராமானுஜர் எடுத்துச் செல்லும் முறை

இராமானுஜர் காஞ்சி மாநரிலே மாதவப் பிரகாசரிடம் வேதாந்தக் கல்வி பயின்று பெரும் புகழ் பெற்றிருந்தார். இவர் ஆளவந்தார் என வழங்கிய யாமுனாசாரியார் என்பாருக்குப் பின் ஞானச் செங்கோல் செலுத்தியவர். இவர் ஆளவந்தார் செய்ய விரும்பிய அரும் பணிகளைத் தாமே செய்து நிறைவேற் றியவர் ஆவார். விஷ்ணு புராணத்தைச் செய்த பராசரர் பெயரினை நிலைக்கச் செய்தமை, நம்மாழ்வார் பெருமையை நாடெங்கும் பரப்பியமை, பிரம்ம சூத்திரத்திற்கு விசிட்டாத்வைத உரை செய்தமை ஆகிய மூன்று பணிகளையும் ஆளவந்தார் இராமானுஜரிடம் விட்டுச் சென்றார். இராமானுஜர் தமது ஆத்மிக சக்தி, கல்வி நலம், நிர்வாகத்திறமை என்பன போன்ற இயல்புகளால் வைணவ சமயத்தை நிலை பெறச் செய்தார்.[7]

வேதகாலத்தில் பயத்தின் அடிப்படை யாகக் எழுந்த பக்தியானது, அதாவது இயற்கையின் பல்வேறு கூறுகளையும் கண்டு அஞ்சிய மக்கள், அச்சக்திகளுக்குத் தெய்வீக அம்சம் கொடுத்த பயத்தின் அடிப்படையாக வழிபடப்பட்ட முறையா னது இராமானுஜரது காலத்தில், ஒரு வாழ்க்கை நெறியாக, அதாவது மககள் மயப்படுத்தப்பட்ட ஒரு நெறியாக வளர்த் தெடுக்கப்பட்டது. இவ்வகையில் இராமா னுஜர் வைணவ பக்தி நெறியை எளிமை யாகவும் இனிமையோடும் அகிம்சா மனோபாவத்துடனும் வளர்த்துச் சென்றவர்.

இராமானுஜர் யாதவப்பிரகாசரிடம் வேதாந்தக் கல்வி கற்றது அவரது இந்த நீண்ட பெருவாழ்வில் ஒரு முக்கியமான மைல்கல்லாகும். கி.பி.1049 இல் தமது முப்பத்திரண்டாம் வயதில் இவர் துறவு பூண்டார். இவ்வாறு இவர் துறவு பூண்ட பின் இவரது வாழ்க்கையின் முக்கியமான பகுதி தொடங்குகிறது. திருவரங்கத்தில் செய்து வந்த பிரசாரம் இவர் புகழைப் பாரதபூமியெங்கும் பரப்பிவிட்டது. திக்கு விஜய யாத்திரை இந்தப் புகழொளியை மேலும் வசீகரமானதொரு தெய்வீக ஒளியாகப் பிரிணமிக்கச் செய்துவிட்டது. ஸ்ரீவைஷ்ணவம் என்ற கற்பகதருவுக்கு சுமார் அரை நூற்றாண்டு பிரசாரத் திருப்பணி பல நூற்றாண்டுகளின் வைரவம் பாய்ந்த வளர்ச்சியைத்

தந்துவிட்டது.[8] இவ்வகையிலே இராமானுஜர், பக்தி இயக்கத்தை வளர்த் தெடுத்துச் செல்வதில் நாயன்மார்கள் ஆழ்வார்கள் எத்தகைய வழிமுறைகளைக் கையாண்டார்களோ அதே வழிமுறை களையே தாமும் கையாண்டு தென்னாட்டு வைணவ பக்திநெறியை வளர்த்துச் சென்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

இராமானுஜரது சிறந்த பங்களிப்பி னைப் போற்றிப் பலர் வியந்து கூறியுள்ளார்கள். இவ்வகையில் இராமானுஜருக்குப் பின் எழுந்த சமய இலக்கியங்களிளெல்லாம் இவரின் உள்ளக் கருத்துச் செறிந்திருக்கக் காணலாம் என்று சுவாமி விடுலானந்தர் எழுதியுள்ளார். மேலும் மத்துவாச்சாரியார், வல்லபாச்சாரியார், ஸ்ரீ சைதன்னியர் இராமானந்தர், கபீர்தாசர், குருநானக் முதலானோரின் இயக்கங்களும், பத்தொன்பதாம் நூற்றாண்டில் எழுந்த பிரமசமாஜம் என்னும் நவீன சீர்திருத்த இயக்கமும் இராமானுஜ ரின் ஈசுவரவாதநெறிக்குப் பெரிதும் கடமைப்பட்டன என்று பேராசிரியர் இராதாகிருஷ்ணன் எழுதியுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

வைகுண்ட பதவியை அடைவதற்கு கர்மமார்க்கம், பக்தி மார்க்கம், ஞான மார்க்கம் என்ற மூன்றும் துணை செய்யும் என்பது இராமானுஜர் கருத்தாகும். தன்னலமற்ற சேவையானது மனதைச் சுத்தப்படுத்துகிறது. ஜீவன் தன்னைப் பற்றியே தியானம் செய்தலை இது சாத்தியமாக்குகிறது. இத்தகைய தியானத் தின் மூலம் அது இறைவனைச் சார்ந்திருக்கும் அறிவைப் பெறுகிறது. பின் அது இறைவன் மேல் அன்பு; பாராட்டவும் அவனைப் பற்றிப் பெரிதும் தியானிக்கவும் தொடங்குகிறது. ஞானத்தைப் போலவே பக்தியிலும் தியானம் அடங்கியுள்ளது என்கிறார்.[9]

இராமானுஜர் வேதத்தில் சொல்லப் பட்ட சடங்குகளை மட்டுமன்றி மந்திரங் களையும் வழிபாடுகளையும் நடத்த வேண்டும் என்று கூறுவதுடன் இதை பகவத் கைங்கர்யம் என்கிறார். எனவே ஆன்மாக்கள் உடலுடன் இருக்கும்வரை இவ்வாறு செயல் செய்து கொண்டே இருக்கவேண்டும். ஆன்மா அறிவு விளக்கம் பெற்ற ஆண்டவனின் அருளுக்குத் தன்னைத் தகுதியாக்கிக் கொண்டாலும் வைகுண்டம் சேரும்வரை இவ்வுலகில் இருந்து கொண்டே அவன் பிரீதியின் பொருட்டு வழிபாடுகளைச் செய்துவர வேண்டும். இவ்விதம் இறைவனிடம் பக்தி செலுத்தும்போது அது வெறும் உணர்ச்சி மயமான பக்தியாக இராது. அவனைப் பற்றிய அறிவின் முதிர்ச்சியால் ஏற்பட்ட அன்பின் புலப்பாடாகவே இருக்கும். சிறந்த ஆசிரியரிடமிருந்து இறைவன் பெருமையை அறிந்து கொண்டதன் பின்னரே அவன் மீதுள்ள அன்பு மேலும் பெருகும். விஷ்ணு நாராயணனின் பெருமை களை அறிந்தே அன்பு செலுத்துவதால் ஞானயோகத்துக்குப் பிறகே பக்தியோகம் மேற்கொள்ளப்படுகிறது. வேத உபநிடதங் களில் வரும் கேட்டல், சிந்தித்தல், தெளிதல், தியானித்தல் என்பவற்றில் வரும் தியான நிலையை ஒத்தது இராமானுஜர் கூறும் பக்தி நிலையாகும். விஷ்ணு நாராயணனின் பூரண நிலையை அறிந்து அவன் மேல் இடையறாத அன்பு செலுத்துவதே பக்திமார்க்கமாகும். அவனின் அருளைப் பெற இப்பக்தி மார்க்கமே சிறந்த வழியாகும். முதிர்ந்த அன்பின் காரணமாக அவனையே நினைந்துருகு வோர் ஈற்றில் அவனையே

அடைவார்கள். இவ்வுலக வாழ்க்கையில் இவ்வாறு இடையறாது அவனை நினைந்துருகு வோர் உடல் நீத்தவுடன் திவ்விய மங்களதேசத்தைப் பெற்று ஸ்ரீ வைகுண்டத்தை அடைந்து ஸ்ரீமத் நாராயணன் சந்நிதியில் அவன் சேவையில் நித்திய ஆனந்தமடைவர் என்கிறார்.

இத்தகைய பக்தி மார்க்கத்திலும் இரண்டு வகையுண்டு. சாதாரணமாக இறைவன் மேல் பக்தி செய்வதற்குச் சில தகுதிகள் வேண்டும். தக்க குருவை அடைந்து வேதம் படித்து கேள்வி ஞானம் பெற ஒருவர் உயர்சாதியைச் சேர்ந்தவனாக இருக்க வேண்டும். அத்துடன் குறிப்பிட்ட சில ஆசார அனுட்டானங்களைத் தவறாது பின்பற்ற வேண்டும். ஆகவே இது எல்லோராலும் கைக்கொள்ளக் கூடிய ஒருவழி அல்ல. இதனால் இராமானுஜர் எல்லோரும் கடைப்பிடிக்கக் கூடியதான பிரபக்தி எனும் ஒரு மார்க்கத்தையும் காட்டியுள்ளார். பிரபக்தி மார்க்கத்திற்கு இப்படியான ஒரு தகுதியும் தேவையில்லை. ஸ்ரீமத் நாராயணனிடம் தன்னை முற்று முழுதாக ஒப்படைத்தல் அல்லது சரணடைதலே பிரபக்தி மார்க்கமாகும். இதன்படி ஒருவன் எந்நேரமும் நாரயணனை நினைத்துக் கொண்டிருப்பான். செய்யும் செயல் அனைத்தையும் அவன் பொருட்டே செய்வான். இந்நிலையில் முதிர்ச்சி பெறும் பொழுது அவன் அருட்காட்சி பெற்று ஈற்றில் அவனதுஉலகை அடைவான்.[10]

## 4.0 இராமானுஜர் ஸ்ரீபாஷ்யம் எனும் வேதாந்த நூல் எழுதிய சிறப்பு

தென்னாட்டு வைணவபக்தி நெறிக்கு ஆற்றிய பங்களிப்புகளில் இராமானுஜரால் பிரம்மசூத்திரத்திற்கு எழுதப்பட்ட உரையான ஸ்ரீபாஷ்யம் குறிப்பிடத்தக்கது. ஸ்ரீபாஷ்யம் எழுதப்பட்ட பின்பே இராமானுஜர் பாரத தேசமெங்கும் திக்கு விஜய யாத்திரை புரிந்திருக்கிறார் எனவும் யாத்திரைக்கு முன்பே ஸ்ரீபாஷ்யம் எழுதி முடித்து விட்டார் என்றும் ஆராய்ச்சியாளர் பலவாறாகக் கருதுகின்றனர்.[11] இது எப்படி இருந்தாலும் காஷ்மீரத்தில் போதாயன விருத்தி உரை கண்டறிந்த பின் ஸ்ரீபாஷ்யம் இயற்றப்பட்டது என்று உணர முடிகின்றது.

இராமானுஜர் காஷ்மீரம் சென்று அங்கு பிரம்ம சூத்திரங்களை விளக்கிக் கூறும் போதாயண விருத்தி என்ற நூலைப் பெற்றார். திருவரங்கம் வந்து பிரம்ம சூத்திரத்திற்கு உரை எழுதினார். அவ்வுரை நூலே ஸ்ரீபாஷ்யம் எனப் பட்டது. இந்நிலையில் தாம் வாழ்ந்த சோழநாட்டை விட்டகல வேண்டிய சூழ்நிலை இவருக்கு ஏற்பட்டது. சோழ வேந்தரில் சைவப் பற்றுமிக்க சிலர் வைணவருக்கு இன்னல் விளைவித்தனர். இதன் விளைவாக ஹொய்சான நாட்டை அடைந்தார். அங்கு சென்ற அவர் ஹொய்சான மன்னரான பிட்டிதேவர் என்பாரை வைணவராக்கியதோடு அவர் பெயரையும் விஷ்ணுவர்த்தனர் என மாற்றினார். சோழவேந்தன் இறந்துவிடவே மீண்டும் திருவரங்கம் வந்து தமது பெருநூலை எழுதி முடித்தார்.[12] மேலும் இராமானுஜர் வேதாந்தசாரம், வேதாந்த சங்கிரகம், வேதாந்த தீபம் ஆகிய நூல்களை எழுதினர். அத்துடன் பிரம்ம சூத்திரங்களுக்கு ஸ்ரீபாஷ்யமும் பகவத் கீதைக்கு விளக்க உரையும் எழுதியுள்ளார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

பகவானை அடையப் பகவானுடைய அருள்வழியே உபாயமாகும். சரணாகதியை ஆதாரமாகக் கொண்ட கைங்கரிய சேவையே பக்தி வழி. இத்தகைய கொள்கைக்கு இடம் தாக்கப்பட்டிருப்பது இராமானு ஜர் இயற்றிய ஸ்ரீபாஷ்ய நூல் ஸ்ரீவைணவ விசிட்டாத்வைதக் கொள்கைக்கு ஆதார நூல் என்பது ஸ்ரீவைணவப் பேரறிஞர்க ளின் கருத்துமாகும். தியானம், உபாசனை, பக்தி இவற்றின் மூலம் முக்தி அடைப்படுவது என்பதுதான் வேத வேதாந்தங்களின் கருத்தாகும் என்பது ஸ்ரீபாஷ்யத்தின் சாரமாகும். இத்தகைய சிறப்புமிக்கஉ மகத்தான தெய்வீக ஸ்ரீபாஷ்ய ஐந்நூற்றி நாற்பத்தியைந்து சூத்திரங்களையும் நான்கு அத்தியாயங்களையும் கொண்டது. ஒவ்வொரு அத்தியாயமும் நான்கு பாதங்களாக அமைக்கப் பெற்றுள்ளது. இதில் நூற்று ஐம்பத்தாறு பிரிவுகள் உள்ளன. இவைகளின் வேத உபநிடத அர்த்தங்கள் விசாரிக்கப்படுகின்றன.[13]

இராமானுஜர் ஸ்ரீபாஷ்யம் எழுதி முடித்த பின் தம் கொள்கைகளைப் பாரத பூமியெங்கும் திரிந்து பரப்ப முயன்றார். குலசேகராழ்வார் "தீதில் நன்னெறி" என்று குறிப்பிடுகின்றார். பக்திப் பெரு நெறியாகிய ஸ்ரீவைஷ்ணவ சமயத்தை திருவாரங்கத்திலிருந்து பாகவதத் பெரியோர்கள் துறவிகளும் அடியவர்களும் புறப்பட்டு எங்கும் திரிந்து பாகவத தர்மப் பிரசாரம் செய்து வந்தார்கள் என்ற குறிப்பைச் சிறப்பாக குலசேகரர் வாக்கிலும் பொதுவாக ஏனைய ஆழ்வார்கள் வாக்கிலும் காண முடிகின்றது.[14] திருக்கோளூரிலிருந்து ஆழ்வார் திருநகரி வந்து இராமானுஜர் திருக்குறுங் குடிக்குச் சென்று அங்கே கோயில் வழிபாட்டில் சீர்திருத்தங்களைச் செய்தார் என்பதைக் குரு பரம்பரை நூல்கள் கதை வடிவில் தெரிவிக்கின்றன. மேலும் திருக்குறுங்குடி நம்பியே இவருக்குச் சீடராகி ஸ்ரீவைஷ்ணவ நம்பி என்ற தாஸ்ய நாமமும் பெற்றுக் கொண்டார். இதிலிருந்து இராமானுஜர் வைணவபக்தி நெறிக்கு ஆற்றிய பங்களிப்பினை அறிந்து கொள்ள முடிகின்றது.

## 5.0 இராமானுஜரது ஸ்ரீவைணவமும் அதன் முக்கியத்துவமும்

இராமானுஜரின் ஸ்ரீவைஷ்ணவம் எனும் மதமானது வேதாந்த அடிப்படையில் மட்டுமன்றித் தமிழகத்தில் தொன்று தொட்டு வழங்கி வந்த ஆழ்வார்களின் அருள் செயல்களில் தோய்ந்து உரம் பெற்றிருந்த அடிப்படையிலும் அமைக்கப் பெற்றிருக்கிறது. இதனால்தான் ஸ்ரீவைஷ்ணவத்தை "உபய வேதாந்தம்" என்கிறார்கள். மேலும் ஸ்ரீவைஷ்ணவம் என்ற அன்புப் பெருநெறி "கண்டதே காட்சி கொண்டதே கோலம்" என்றிருக்கும் லோகாயதர்களும் திருந்திப் பேறு பெறுவதற்கு இடமளித்து வந்திருக்கிறது. சிற்றின்பப் பிரியர்களையும் திருத்திப் பணிகொள்ளும் சக்தி இந்த சமயநெறிக்கு உண்டு. எடுத்துக் காட்டாக பிள்ளையுறங்கா வில்லிதாசர் தம் மனைவி மீது கொண்டிருந்த காதலை இறைவன் மீது பக்திப் பெருங்காதலாக மாற்றி வளர்த்துக் கொண்டு பரம வைஷ்ணவராக வாழ்க்கை நடத்தினார். மேலும் திருடர்களும் திருந்தி உய்ந்து போக வழிகாட்டுகிறது ஸ்ரீவைஷ்ணவம் என்ற பக்திப் பெருநெறி. இந்தச் சிறப்பியல்பைத் திருமங்கை யாழ்வாரைப் பற்றிய கதைகள் சுட்டிக் காட்டுகின்றன.

திருடர்கள் மட்டுமல்ல, இறைவனுக்குரிய ஆத்மாவை நான் என்று சொந்தமாக்கிக் கொள்ளப் பார்ப்பதே களவு தான். இதனை ஆத்மாபஹாரக்களவு என்று குறிப்பிடுகிறது ஸ்ரீவைஷ்ண சிந்தாந்தம்.[15]

இராமானுஜர் புறச்சமயிகளையும் திருத்திப் பாகவதர்களாக்கிக் கொண்டார் என்பதற்குப் பல சான்றுகளை இவரது வாழ்க்கையிலே காண்கிறோம். இவ்வகை யிலே அத்வைதிகள், விசிட்டாத்வைதிக ளானது மட்டுமல்ல, ஜைன பௌத்தர் களையும் இவர் தம் பாகவதப் பெருந் திரளில் சேர்த்துக் கொண்டார். ஒருமை உள்ளத்துடன் ஒரே குறியாகத் திருமாலைப் பரம் பொருளாய்க் கருதி சரணடைய விரும்பியவர்கள் அனைவரும் வைணவர் கள் எனவும் விஷ்ணு எங்கும் பரவியிருப்ப தால் உலகமெல்லாம் வைஷ்ணவமயமாக வேண்டும் என்று பொற்கனவு கண்டார் இராமானுஜர். மேலும் கற்றவர்களுக் கெல்லாம் கதியாவது வைஷ்ணவம் என்ற கருத்துடன் நாற்பாற் குலத்திற்கும் கீழ்பட்டவர்கள் என்று கருதப்பட்டவர் களைத் திருக்குலத்தாராக்கித் திருத்த முயன்றது இராமானுஜரது திருவுள்ளம். சாஸ்திரங்களில் கூறப்படும் வருணாச் சிரம தரும நெறிகளைப் பழைய தூய வைதிகநிலையில் ஸ்ரீபாஷ்யம் ஒப்புக் கொள்கிறது என்பது உண்மை தான். ஆனால் பாகவதர் குழாத்தில் ஜன்ம நிரூபணம் அதாவது சாதியைக் குறிப்பிடும் பழக்கம் கூடாது என்ற கொள்கை அனுஷ்டானத்திலும் இருந்தது என்பதற்கு இராமானுஜரது வாழ்க்கைக் கதைகளும் உபதேசங்களும் தெளிவாக்குகின்றன.

பாகவதர்களுக்கிடையே சகோதர தர்மம் நிலவ வேண்டும் என்ற ஸ்ரீவைஷ்ணவ சித்தாந்தக் கொள்கையை உள்ளத்திற் கொண்டே கம்பன் தமிழ் மக்களுக்கு பேரிதிகாசமாகத் தான் இயற்றி வைத்திருக்கும் இராமாயணத்தைச் சரணாகதி நூலாகக் காட்டுவதுடன் சகோதர தரும நூலாகவும் அமைத்துக் காட்டுகிறார்.

> "நீதியால் வந்ததொரு
> நெடுந் தரும நெறி அல்லால்
> சாதியால் வந்த சிறு
> நெறி அறியான்"

என்று விபீஷணனைக் குறித்துக் கும்ப கர்ணன் கூற்றாகக் கம்பன் வெளியிட்டிருக்கும் கொள்கை ராமானுஜ சித்தாந்தத் தின் சிறப்பியல்புகளில் ஒன்றைத் தழுவி விளைந்திருப்பது தான் என்று ஊகிப்பது தவறாகாது. விபீஷண சரணாகதியில் ஸ்ரீவைஷ்ணவர்கள் சரணாகதியின் உச்சநிலை ஒன்றைக் காண்கிறார்கள்.

ஆசாரிய மணிமாலையில் நடுநாயக மாகத் திகழும் இராமானுஜரின் ஸ்ரீபாஷ்ய த்தால் ஸ்ரீவைஷ்ணவ சம்பிரதாயத்திற்கு விசிட்டாத்வைத வேதாந்தக் கோட்டை கிடைத்திருக்கிறது. இராமானுஜர் ஸ்ரீபாஷ்யத்தாலும் தம் வாழ்க்கையாலும் தனிப்பெரும் பணிகளாலும் காட்ட முயலும் பரம்பொருள் முளைக்கும் தத்துவ சிந்தனைகளுக்கும் தேவைப்படும் தெய்வமல்ல. மக்களின் இதயமும் ஆன்மா வும் தேடித் தவிக்கும் அன்புருவாகிய அருள் நிதியாவார். இந்த அருள் நிதியாகிய அழகனை "உடையவன்" என்று கூறுகிறோம். உலகத்தில் உள்ளும் புறமுமாய் இருந்து காப்பாற்றும் அருள் நிதியின் உடைமை தானே உலகம். இவ்வாறு உடையவனைக் காட்டிய இராமானுஜரை "உடையவர்" என்கிறோம்.[16]

அன்பினால் தியாகத்தால் எம்மை உடையவர் அல்லவா இராமானுஜர்: உடையவனாகிய பகவானை எம்பெருமான் என்று ஆர்வத்துடன் குறிப்பிடும் ஸ்ரீவைஷ்ணவர்கள் இராமானுஜரை எம்பெருமானார் என்று குறிப்பிடுவதும் கவனிக்கத்தக்கது. இவ்வாறு குறிப்பிடுவதிலிருந்தே விஷ்ணு மதமாகிய ஸ்ரீவைஷ்ணவத்தை இராமானுஜர் எப்படியெல்லாம் பேணி வளர்த்திருக்கிறார் என்பதை உய்த்துணர்ந்து கொள்ள முடிகின்றது.

இராமானுஜர் காலத்திலும் இவருக்கு முன்பும் ஆழ்வார்களும் திவ்யப் பிரபந்தங்களும் பிரசித்தி பெற்று ஸ்ரீவைஷ்ணவம் ஓரளவு மக்களிடையே தழைத்து வளர்ந்து வந்தது என்பதற்கு சிவபக்தியைச் சிறப்பாக வளர்த்த சோழ மன்னர்களின் சாசனங்களிலும் சான்றுகள் காண முடிகின்றது. நாயன்மார்களின் சிவநெறியைத் தமிழ் மக்கள் போற்றி வந்தது போல் ஆழ்வார்களின் விஷ்ணு பக்தி நெறியையும் போற்றி வந்தனர் என்பது தெளிவாகின்றது. சோழர் ஆட்சிகளில் சிவஸ்தலங்களில் தேவாரப் பதிகங்கள் ஓதப்பெற்றதுபோல் விஷ்ணு ஸ்தலங்களில் ஆழ்வார்களின் பாசுரங்கள் ஓதப்பெற்றன. சிவனடியார்களைப் போல் திருமால் அடியவர்களான ஆழ்வார்களும் பல்வேறு குலப்பிரிவுகளில் தோன்றிவர்களே. இதிலிருந்து பொங்கியெழுந்த பக்தி வெள்ளம் தமிழர் சமுதாயத்தின் எல்லாப் பிரிவுகளையும் பொதுவாக மங்கல முழுக்காட்டி புனிதமாக்க முயன்றது எனக் கருதுவது தவறாகாது. மேலும் பக்தி இயக்கத்துடன் வேதாந்த அறிவியல் சிந்தனைகளும் இராமானுஜர் காலத்திற்கு முன்பே தமிழகத்தில் தழைத்து வளர்ந்திருந்தன.[17] இவ்வாறாக ஸ்ரீஇராமானுஜர் தமது ஆத்மீகசக்தி, கல்விநலம், நிருவாகத்திறமை என்பவற்றினால் ஸ்ரீவைஷ்ணவ சமயத்தை நிலைபெறச் செய்தார்.

## 6.0 இராமானுஜரும் விசிட்டாத்வைதமும்

இராமானுஜர் சமயம், தத்துவம் எனும் இரண்டையும் இணைத்து வெளியிட்ட தத்துவ முறையை விசிட்டாத்துவிதம் என்பர். இவர் பிரமம் சகுணம் என்பதாகக் கொண்டு ஆன்மா, உலகம் என்பவற்றை அச்சகுணப் பிரமத்தின் உடலாகக் கொண்டார். விஷ்ணு பரமாத்மா ஆன்மாக்களின் ஆன்மாவாகவும்: இயற்கையின் ஆன்மாவாகவும் இருக்கின்றார். ஆன்மாவும் உலகமும் என்றும் உள்ளவை. ஆனால் அவை கடவுளுக்குப் புறம்பானவை அல்ல. இவற்றை ஒன்றாக்கி ஆள்வது, வெளியே காணப்படாது உள்ளே இறையோடும் "அப்பிரதச்சித்தி" எனும் பிரிக்க முடியாத தன்மையாகும்.[18] விஷ்ணுவையே முழுமுதற் பொருளாகக் கொண்ட இராமானுஜர் பிருகதாரண்யக உபநிடதத்தின் பகுதியைத் தமது அடிப்படை மூலமாகக் கொண்டார். அவ்வுலகின்கண் வாழ்பவனும் இதன் உள்ளுறைபவனும் உலகத்தாரால் உணரப்படுபவனும் இவ்வுலகத்தையே உடலாகக் கொண்டவனும் இதனுள்ளிருந்து உலகை இயக்குபவனுமாகிய அவனே ஆத்மாவின் உள்ளிருந்து ஆள்பவன்: அழியாத்தன்மை உடையவன்: இறைவனே இவ்வுலகின் முழுக்காரணன்: ஒரே காரணனாயிருந்தாலும் அவன் இவ்வுலகில் அடங்கியிருக்கிறான். அதேசமயத்தில் இதை மீட்பவனும் அவனே. அவன் கடைத்தேறாது போன ஆன்மாக்களைத் திரும்பவும் பெற அவ்வப்போது அவதாரம் எடுக்கி

றான். அவன் பல தெய்வத் தலங்களில் காணப்படும் விக்கிரக வடிவங்களிலும் தோன்றுகிறான்.

இராமானுஜருக்கு முன்காலத்திலேயே விசிட்டாத்வைத வேதாந்தம் இருந்து வந்திருக்கிறது. போதாயனரைத் தவிர டங்கர், குகதேவர் முதலானவர்கள் விசிட்டாத்வைதக் கொள்கைகளை வெளியிட்டிருப்பதாகத் தெரிய வருகிறது. இவர்களில் திரமிடாசாரியாரும் ஒருவர். இவர் பிரம்ம சூத்திரங்களுக்குச் செய்த பாஷ்யத்தை திரமிடபாஷ்யமென்பர். விசிட்டாத்வைதம் என்பது "விசிஷ்டஸ்ய அத்வைதம்" என்று பதச் சேர்க்கை உடையதாகும். விசேஷ தன்மை பொருந்திய அத்வைதம் எனப்படும். இது ஒன்றுடன் ஒன்றிணைந்து ஒன்றுடன் அடங்குவது. ஆத்மா, ஜீவாத்மா, பரமாத்மாவுடன் இணைவது. சித்து அசித்து, ஈஸ்வரன் என்கிற மூன்று பொருள்கள் இணைந்த கூட்டமே உலகம் என்றும் இதில் ஈஸ்வரன் அனேக மங்கள குணங்களை உடையவன் என்றும் ஸ்ரீபாஷ்யம் வெளியிடும் விசிஷ்டாத்வைதம் தெரிவிக்கிறது.[19]

பக்தி மார்க்கத்தை கடைப்பிடிக்கப் பிறப்பு என்பது போன்ற தகுதிகள் தேவை. இதற்கு மாற்று வழியாக விசிஷ்டாத்துவைதம் "பிரபத்தி" என்னும் வழியைப் போதிக்கின்றது. இறைவனையே தஞ்சம் என்று கொண்டு அவனை முற்றிலும் சரணடைதல் என்பதே பிரபத்தி. பாகவத மரபுப்படி இதுவே வீடுபேறடைவதற்குச் சிறந்த பயனளிக்கும் வழி. எத்தகைய வேறுபாடும் இன்றி இவ்வழி எல்லோருக்கும் உதவுகிறது. இதில் ஒருவன் செய்ய வேண்டுவதெல்லாம் இறைவனின் சித்தத்தைத் தொடர்ந்து செல்லுதல், அவன் நோக்கங்களை மீறிச் செயற்படாதிருத்தல், அவன் தன்னை மீட்பான் என நம்பிக்கை கொள்ளல், அவனிடமிருந்தே உதவிபெற முயலுதல், எல்லா வகையிலும் தன் விருப்பங்களை அவன் விருப்பத்திற்குக் கீழாகச் செய்தல் என்பனவாகும். ஞான பக்திக்குக் கூடப் பிரபத்தி வழி காட்டுவதால் அது முக்கியமானது. இறைவனைச் சரணடைபவரெல்லோரும் அவனால் மீட்சி பெறுகின்றனர். அவர்கள் உடல்கள் அழிந்து போனாலும் அவர்கள் "படித்தேளிர் வாழும் உலகுக்கு" அதாவது வைகுண்டத்திற்குச் செல்கின்றார்கள். அங்கு எப்போதும் இறைவன் தரிசனத் தைக் கண்டு களிக்கின்றார்கள்.[20]

## 7.0 வைணவபக்தி நெறி வளர்ச்சியில் இராமானுஜர்

இராமானுஜர் ஆழ்வார்களின் கொள்கைகளை அடிப்படையாக அமைத்துத் தானே தமது சீர்திருத்த முறைகளை உருவாக்கியுள்ளார். மேலும் இவர் தென் பாண்டி நாடு செல்லுமுன்பே அழகர் கோயிலான திருமாலிருஞ் சோலை, ஸ்ரீவில்லிபுத்தூர் முதலான தலங்களைத் தரிசித்து அவற்றையும் தம் வைஷ்ணவப் பெருங் கொள்கைக்கு உரிய வளர்ப்புப் பண்ணைகளாக்கிக் கொண்டார். இராமானுஜர் ஸ்ரீரங்கத்திலிருந்து சோழதேசமெங்கும் சென்று பாண்டிய நாட்டிற்கும் திருவனந்தபுரத்திற்கும் சென்ற பின் திரும்பி வந்து திருப்பதிக்குச் சென்றார் என்றும் பின்னர் அகோபிலம், மகாராஷ்ர தேசம் எனும் இடங்களிலும் தம் கொள்கைகளைப் பரப்பிய வண்ணம் சென்று வடநாட்டை அடைந்தார் என்றும் கூறுவர். இவ்வகையிலே இராமானுஜர் திருவரங்கத்திலிருந்து செய்த பணிகள் பலவாகும். அவற்றுள் குறிப்பிடத்தக்கன

திருவரங்கக் கோயிலின் சிதைந்த மதில்களைச் செப்பனிட்டமை, வசந்த மண்டபங்கள், பூங்காக்கள் செப்பனிட்டமை, கோயில் வழிபாட்டு முறைகளைச் செம்மைப்படுத்தியமை, மடப்பள்ளியில் காலம் தவறாது நிவேதன உணவுகளை சமைக்கவும், ஆராதனைக்கு ஆக்கவும் செய்தமை போன்றனவாகும். இராமானுஜர் நாலாயிர திவ்விய பிரபந்தப் பாடல்களைக் கோயில் வழிபாட்டுடன் இணைத்துப்பரப்பினார்.[21]

இராமானுஜரது சீரிய உளப்பாங்கினை உலகம் அறியும். தாம் நரகம் புகினும் உய்தல் வேண்டும் என்னும் கருத்தினோடு கோபுரத்தின் மீது நின்று மறைமொழியை அனைவர்க்கும் உணர்த்தினார். இவரது அருட்கடைக் கண்ணோக்கினாலே தீண்டாதாரும் பிறரும் உயர்வெய்தினர். இவரது போதனைகள் வடநாட்டிற் பரவிய போது அங்குள்ள பெரியாரும் சாதிக்கட்டுப் பாட்டினைத் தகர்த்தெறிந்து சமய உண்மைகளை அனைவர்க்கும் உரிமை யாக்கினர்.[22] நாயன்மாரது அருண் மொழிகள் ஒரு புறமாக வடநாட்டு வைதிக தாந்திரிகக் கொள்கைகள் மற்றொரு புறமாக நின்று தென்னாட்டு சைவத்தை வளர்த்தன. தென்னாட்டு வைணவமோ என்றால் ஆழ்வார்களாகிய ஊற்றினின்று உதித்து அன்பு வெள்ளம் பெருக்கி வடக்கு நோக்கி அலையெறிந்து பாய்ந்து பாரத நாடு முழுவதும் பரவியது. முன்னாளிலே பகீரதர் என்னும் பெரியார் கங்கையாகிய வானதியினைப் பூவுலகிற்குக் கொண்டு வந்தார் எனப் புராணங் கூறும். இராமானுஜ முனியாகிய பகீரதர் தென்னாட்டுத் தெய்வக் காவிரி வெள்ளத்தினை வடநாட்டுக் கங்கையிலே கலக்குமாறு செய்தார். இத்தகைய கலப்புக் கங்கைநதியூற்றெடுக்கும் திருமலைக்கும், சென்று சேரும் கடலுக்கும் இடையே கிடந்த பல இடங்களிலும் நிகழ்ந்தது. இத்தகைய கலப்பினால் ஏற்பட்ட அன்பு வெள்ளம் பாரதநாட்டின் மேற்குத் திசையிலும் பரவியது, என்பது இராமானுஜரது பக்திநெறி பற்றிக் கூறவந்த விபுலாநந்தரது கூற்றாகும்.

சங்கரருக்குப் பின்வந்த இராமானுஜர் சங்கரரைப் போல வேதாந்த சூத்திரம், உபநிடதங்கள், பகவத்கீதை போன்ற நூல்களுக்கு உரை வழங்கி ஒழுங்கு முறையான ஒரு தத்துவ அமைப்பினை முன்வைத்தவரில் ஒருவராவர். விசிட்டாத்வைதம் எனும்வகையில் இராமானுஜரின் தத்துவக் கொள்கை விளங்குகின்றது. சுருக்கக் கூறின் விசேடித்த அத்வைதக் கொள்கையாக இது அமைவுற்றதெனலாம். வைணவப் பாரம்பரியத்தில் உதித்த இராமானுஜர் வைஷ்ணவ சமயத்தின் வளர்ச்சி கருதி சங்கரரது தத்துவ செல்வாக்குக்கு உட்பட்ட அத்வைதத்தினை ஆழமாக நோக்க வேண்டிய சூழலுக்குட்பட்டிருந்தார். சங்கரரது தர்க்க தத்துவ நோக்கினை முற்றாக நிராகரிக்க முற்படாத இராமானுஜர் சங்கரர் அலசாது விட்ட தெளிவில்லாத கருத்துக்களுக்கு மேலும் விளக்கம் கூறுவதற்காக உயர்ந்ததொரு நெறியினைப் படைக்க முற்பட்டிருந்தமை விசிட்டாத்வைதத்திற்கு ஊடாகப் புலனாகிறது.[23]

சங்கரரது அத்வைதக் கோட்பாடு தத்துவார்த்த நோக்கில் பலராலும் ஏற்றிப் போற்றப்பட்டிருந்தாலும் அனைத்து ஆன்மாக்களையும் நல்வழிப்படுத்தி அமைத்துச் செல்லவல்ல நிலையில் அமைந்திருக்கவில்லை என்பது குறிப்பிடத்

தக்கதாகும். இந்நிலையில் மக்கள் பலருக்கும் நன்மை பயப்பதான தத்துவமாக அத்வைதம் அமைவதில் சில சிக்கல்கள் எழுவது தவிர்க்க முடியாத தாக இராமானுஜருக்குப் புலப்பட்டது. அதனால் மக்களை நல்வழிப்படுத்தவல்ல சமயநெறி தத்துவத்துடன் இணைந்திருக்க வேண்டுமென்பதனை உணர்ந்தார். இவ்வகையிலே தத்துவமும் சமயமும் தனித்தனியாக இருப்பதில் பயனில்லை என்பதைக் கண்டார். மேலும் மேலைத் தேய தத்துவ ஞானியான "லைபினிட்ஸ்" (Lypinitz) போல தத்தவத்தையும் சமயத்தையும் ஒன்றிணைத்து விளக்கிய பெருமைக்குரிய தத்துவவாதியாக இவர் தரிசனப்பரப்பில் விளங்குகின்றார். வடக்கில் நிம்பர்க்கர் வைணவ சமயத்தினை வளர்த்தெடுத்துச் சென்றமை போல, தெற்கில் இராமானுஜர் வைணவ சமயத்தினை வளர்த்தெடுத்தார். இவ்வகையிலே இராமானுஜரின் பின் விசிஷ்டாத்வைதமானது வைணவத்தினைத் தத்துவ ரீதியிலும் சமயநெறியிலும் ஓர் ஆழமான பாதையில் அமைத்துச் செய்ய வழிகாட்டிற்று.[24]

விஷ்ணுவுக்குரிய வியூகத்தில் ஒருவனாகக் குறிப்பிடப்படுகின்ற வாசுதேவன் பண்புகளின் உறைவிடம் எனவும் நல்லியல்புகளின் களஞ்சியம் எனவும் சுட்டப்படுகின்றார். சுவர்க்கத்தின் பொருள் என்றும் பூரண அழகு, வசீகரம், மென்மை ஆகியன உடையவர் என்றும் பக்தனால் சுலபமாக அடையக்கூடியவர் என்றும் அடையவிழைவோர்க்கு அன்பின் சமுத்திரமென்றும் சுட்டப்படுகின்றார். தன்னிடத்தில் மனதை வைத்து தன்னிடத்துப் புத்தியை செலுத்துபவனைத் தன்னிடத்திலேயே வசிப்பவன் என்பதில் சந்தேகமில்லை எனப் பகவான் பகவத்கீதையில் சுட்டுதலைக் காணலாம்.[25] வேத காலத்திலிருந்து இன்றுவரை பக்தியானது நீண்டதொரு வரலாற்றினை உடையதாக விளங்குகின்றது. எனினும் ஆரம்ப காலத்தில் பக்தி மார்க்கம் பற்றி விளக்குகையில் குறைந்த நிலையிலிருக்கும் ஆன்மா மேம்பட்ட ஒரு நிலையை அடைய மாட்டாது எனும் வகையில் கருதினர். ஆனால் இராமானுஜர் கடவுளைப் பற்றி பூரண அறிவைப் பெறப் பக்திமார்க்கம் போதியதொன்றெனக் கருதினார். பக்தியானது மேலான உணர்ச்சி மாத்திரமன்றி அறிவோடு கூடிய ஓர் உணர்ச்சி என்பதுடன் அறிவோடு கூடிய ஓர் உயர்ந்த உந்துதலாகும். கடவுளை மனத்தால் விரும்பும் போது உள்ளுணர்வு மூலமாகக் கடவுள் உணரப்படுகின்றார். இந்தவகையில் பக்தி மார்க்கத்தின் மூலமாகக் கடவுளை உணர்ந்தது மட்டுமன்றி எம்மையும் நாம் பூரணப்படுத்திக் கொள்கிறோம். இவ்வாறு பூரணப்படுத்தலின் மூலம் பூரண அறிவு கிட்டுகிறது. சங்கரர் பக்தி மார்க்கத்தைப் பற்றிக் கூறுகையில் அது இறந்த நிலையில் அறிவைத்தர மாட்டாது எனவும் உள்பொருள் பற்றிய அறிவை ஞானத்தின் மூலமாகத் தான் அறிய முடியும் எனவும் எடுத்துக் காட்டினார். ஆனால் இராமானுஜர் சங்கரரினின்றும் பக்தி மார்க்கத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து உயர்தர அறிவு அமைவதற்கு போதிய ஒன்று எனவும் எடுத்துக் காட்டினார்.

இராமானுஜர் காலத்தின் பின் தமிழ்நாட்டில் வைணவ மதத்திற் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டன. ஸ்ரீவைணவ தத்துவத்தின் பிரதான கோட்பாடுகளில் ஒன்றான "பிரபத்தி" பற்றிய விளக்கத்திலேயே முதன் முதலில் அபிப்பிராய

பேதம் ஏற்பட்டது. பின்னர் சமய அனுட்டான விதிகள் பற்றியும் மாறுபட்ட கருத்துக்கள் ஏற்பட்டன. இதனால் வடகலை, தென்கலை என இரு பிரிவுகள் தோன்றின. இவை மனிதநேய நோக்கின் எதிரொலிகளேயாகும். குறிப்பாகத் தென்கலையினர் சராசரி மனிதன் தனது சொந்த மொழியில் இயல்பாகப் பக்தி உணர்வை வெளியிடவும் இறைவனை நெருங்கவும் வாய்ப்பிருக்க வேண்டுமென விரும்பியவர்கள். சாதி ஏற்றத்தாழ்வற்ற மனப் பக்குவத்தை வெளிப்படுத்தியவர்கள். இவர்கள் திவ்விய பிரபந்தத்தை முதன்மை படுத்தினர். இறைவனது அருளில் முழு நம்பிக்கை கொண்டு பிரபத்தியைப் பேண முற்பட்டவர்கள். வைணவ ஆசாரிய பீடத்தைப் பிராமணர் அல்லாதாரும் அலங்கரிக்கலாம் எனக் கருதியவர்கள். வடகலையார் இவற்றிற்கு நேரெதிரான தளத்தில் நின்றவர்கள் வடமொழி நூல்களை முதன்மைப் படுத்தியவர்கள். பக்தியில் மனித முயற்சியும் அவசியமானதென வற்புறுத்தியவர்கள்.[26]

இராமானுஜர் பக்திவழி மனிதன் கடவுள் பற்றிய முழு அறிவினையும் நோக்கி நகர்கின்றான் என்கிறார். உணவினைக் குறைத்தல், ஏனையவற்றிலிருந்து விடுபட்டுக் கடவுளிடம் பற்று வைத்தல், கடவுளைத் தொடர்ந்து தியானித்தல், பிறருக்கு நன்மை செய்தல், பலாத்காரமின்மை, தானம், நம்பிக்கை போன்றவற்றினை குறிப்பிட்டு இவை பக்தி நிலைப்பதற்கு சாதகமான நிலைகளாக எடுத்தாளுகின்றார். இராமானுஜர் காட்டும் பக்தியின் ஒவ்வொரு படிநிலையின் வளர்ச்சியில் தூய்மை அடைகின்றோம் எனும் கருத்து உயர்ந்த ஒழுக்கநிலைக்கு ஒப்பிடக் கூடியதாக அமைகின்றது. ஒவ்வொரு மனித உள்ளத்தின் புனிதப் பயணத்தின் முன்னேற்றமே சமயம் என்பது போல் வைஷ்ணவம் விளங்குகின்றமை தெளிவானதாகும். ஒவ்வொரு பக்தனும் அன்பு, பண்பு, உண்மை, தியாக மனப்பான்மை, அஹிம்சை, தன்னலமின்மை, தொண்டு எனும் நல்லொழுக்கங்கங்களைக் கொண்டிருக்க வேண்டுமென்பதனைப் போல் இராமானுஜரது பக்தி வழியிலும் அமைகின்ற நிலை இந்து மதத்திற்குரிய உயர்ந்த நிலைப் பாட்டினைப் பிரதிபலிக்கின்றது.

எனவே பக்தி இயக்கத்தின் விளைவுகளில் குறிப்பிடத்தக்கவை ஆலயத்தோடு பின்னிப் பிணைந்த வாழ்க்கை நெறியும், இந்து தத்துவ நெறியும் எனலாம். இவ்வகையில் பக்தி இயக்கத்தால் பரப்பப்பட்ட ஆலய வழிபாட்டு மரபு தமிழ்நாட்டு ஆலயங்களை சமூக முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனங்களாக்கின. மேலும் உணர்வுகளின் விளைவாக ஊற்றெடுத்த பக்தி அறிவு சார்ந்த தத்துவமாக உருவாகி வளர்வதற்கான அடிப்படையாகவும் அமைந்தது. இவ்வாறாகப் பிற்பட்ட காலத்தில் அகில இந்தியாவிலும் உருவாகி வளர்ந்த இந்துமத பக்தி இயக்கத்திற்குத் தமிழ்நாட்டு பக்தி இயக்கமே ஊற்றாக அமைந்திருந்தது என்பது குறிப்பிடத் தக்கது. எனவே இதுவரை தென்னாட்டு வைணவ பக்தி நெறியில் இராமானுஜருடைய நிலையான பங்களிப்புக்கள் அவற்றினுடைய பரிணாம வளர்ச்சிகள் என்பன இங்கு எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

இவ்வாறாக தென்னாட்டு வைணவ பக்திநெறியின் தோற்றம் இராமானுஜரின் தோற்றத்துடன் மேலும் வளர்ச்சி கண்டது எனக் கூறமுடிகின்றது. இத்தகைய தென்னாட்டு பக்திநெறியினூடாகவே வட நாட்டுப் பக்திநெறி வளம் பெற்றது. இதற்கு அளப்பரிய பங்களிப்பினை

வழங்கிய வகையில் இராமானுஜர் குறிப்பி டத்தக்கவர். இந்தியாவின் குறிப்பிடத்தக்க சமயம் சார்பான தத்துவத்தினைக் கட்டி யெழுப்பிய நாயகனாக இராமானுஜர் கருதப்படுகின்றார். இவ்வகையிலே இராமா னுஜரின் இறைநிலைக் கருத்துவாதமே மத்துவர், வல்லபாச்சாரியார், சைதன்யர், இராமானந்தர், கபீர்தாசர், துளசிதாஸர் போன்ற பக்தி நெறியாளர்களின் கருத்து நிலை வளர்ச்சிக்கு அடிப்படையாக விளங்கியது என்றால் தவறாகாது. எனவே வைணவத்திற்கு தத்துவ ரீதியாக, சமய ரீதியாகத் தளமொன்றைச் செப்பனி ட்டவராக இராமானுஜரது பங்களிப்பு அமைந்தது என்று கூற முடிகின்றது.

## அடிக்குறிப்புகள்

1. சுப்பிரமணியன், நா., கௌசல்யா சுப்பிரமணியன் (1993) **இந்திய சிந்தனை மரபு**, சென்னை. ப.79.
2. சொக்கலிங்கம். க. (1986) **வைணவம்**, பக். 7-8
3. **வாழ்வியற் களஞ்சியம்** தொகுதி 11 ப. 875.
4. மேற்படி. ப. 875
5. சுப்பிரமணியன் மு. கு. நூல். ப. 79
6. **இந்துக்கலைக்களஞ்சியம்**, பகுதி 1. ப. 213.
7. குலரத்தினம். க. சி. (1980) **இந்து நாகரிகம்** பாகம் 1. பகுதி 3. ப.3.
8. ஸ்ரீ. பி. (1973) **ஸ்ரீஇராமானுஜர்**, சென்னை. ப. 3280
9. மகாதேவன் ரி. எம். பி. (1964) **இந்து சமய தத்துவம்**, தமிழ்நாடு. ப. 142.
10. பகவத்கீதை
11. கல்யாணராம ஐயங்கார். (1978) **இராமானுஜர் சரித்திர ஆராய்ச்சி மகிமை**, சென்னை. ப. 158.
12. மங்கள முருகேசன். (1975) **இந்திய சமுதாய வரலாறு**, சென்னை. ப. 158.
13. கல்யாணராம ஐயங்கார். மு. கு. நூல். ப. 162.
14. ஸ்ரீ. பி. மு. கு. நூல். ப.196.
15. மேற்படி. பக். 367 - 368.
16. மேற்படி. ப. 370.
17. மேற்படி. ப. 332.
18. ஹிரியண்ணா. (1968) **இந்திய தத்துவம்** பகுதி 11. தமிழ்நாடு. ப. 261.
19. கல்யாணராம ஐயங்கார். மு. கு. நூல். ப. 159.
20. மகாதேவன். ரி. எம். பி. மு. கு. நூல். ப. 142
21. **வாழ்வியற் களஞ்சியம்** தொகுதி 4. ப. 128.
22. நடராசா. க. செ., (1963) **விபுலாநந்த ஆராய்வு**, சென்னை ப. 128.
23. ஞானகுமாரன். நா., (1992) "வைணவ மும் விசிஷ்டாத்வைதமும்" மார்க்கம். ப. 460
24. மேற்படி. ப.46.
25. Radhakrishnan, S., (1927) **Indian Philosophy,** *Vol II, London, Pp. 719.*
26. சுப்பிரமணியன் மு. கு. நூல். ப. 111

## உசாத்துணை


1. கல்யாணராமஐயங்கார். (1968) **இராமானுஜர் சரித்திர ஆராய்ச்சி மகிமை**, சென்னை.
2. குலரத்தினம். க. சி., (1980) **இந்து நாகரிகம்**, பாகம் 1. பகுதி 3.
3. சுப்ரமணியன், நா., கௌசல்யா சுப்பிரமணியன். (1993) **இந்திய சிந்தனை மரபு**, சென்னை.
4. சொக்கலிங்கம். க. 1986 **வைணவம்.**
5. நடராசா. க. செ., (1963) **விபுலாநந்த ஆராய்வு**, சென்னை.
6. மங்களமுருகேசன். ந. க., (1975) **இந்திய சமுதாய வரலாறு**, சென்னை.
7. மகாதேவன். ரி. எம். பி., (1964) **இந்து சமய தத்துவம்**, தமிழ்நாடு.
8. லக்ஷ்மணன். கி., (1967) **இந்திய தத்துவஞானம்**, சென்னை.
9. ஸ்ரீ. பி. ஸ்ரீராமானுஜர். (1973) சென்னை.
10. ஹிரியண்ணா. **இந்திய தத்துவம்** பகுதி 2. தமிழ்நாடு.
11. **மார்க்கம்**, (1992) சமூக பொருளியல் பண்பாட்டு ஆய்வுச் சஞ்சிகை. இதழ் 1. மலர் 2. 3.
12. **இந்துக்கலைக் களஞ்சியம்**, பகுதி 1.
13. **வாழ்வியற் களஞ்சியம்**, தொகுதி 11.
14. **வாழ்வியற் களஞ்சியம்**, தொகுதி 4.
15. Radhakrishnan, S., (1927) **Indian Philosophy,** *Vol II, London.*